23rd August 1960]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Supply of electricity to Kodikkarai

*** 342 *Q*.—SRI A. VEDARATHNAM :** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா (பாயின்ட் கலிமீர்) கோடிக்கரை வாசிகள் பகுதிக்கு மின்சார வசதி எப்போது கிடைக்கும்?

THE HON. SRI V. RAMAIAH : The South Madras Electric Supply Corporation, the licensee of the area, have investigated into a scheme for extending supply of electricity to Kodikkarai but could not take up the scheme as it was found not remunerative.

SRI A. VEDARATHNAM : இந்தியாவிலேயே நம்முடைய மாகாணம்தான் மின்சார விஷயத்தில் முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனல் தஞ்சாவூர் ஜில்லா மாத்திரம் தாயில்லாப் பிள்ளை போல் இருக்கிறது. இங்கு கோடிக்கரையில் மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டுமென்று பல்வேறு இடங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தும்கூட அதற்கு விமோசனம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகையால் இதை விஸ்தரிக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : சமீப காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் கோடிக்கரையைப் பொறுத்தவரை அதிக விஸ்தரிப்பில்லை என்று அந்த நன்ருகப் பரிசிலனை செய்து இப்பொழுது அந்த ஊரிலே லைசன்ஸ்தாரர்களுக்கு பல உதவிகளைக் கொடுத்து விஸ்தரிக்கச் செய்கிறோம். லைசென்ஸ்தாரர்கள் முடியவில்லை என்ருல் சர்க்காரோ, மின்சார போர்ட்டோ விஸ்தரிப்பை மேற்கொள்ள ஏற்பாடு செய்யும். லைசன்ஸ்தாரர்களைப் பொறுத்த மட்டில் எல்லா முயற்சிகளும் எடுத்து வருகிருர்கள். அவர்களுக்கு பர்சன்டேஜ் கொடுக்கிறோம். லைசென்ஸ்தாரர்கள் கேட்கும் குறைந்த பட்சம் உத்தரவாதத்தை ஊர் மக்கள் கொடுக்கும் பட்சத்தில் லைசென்ஸ்தாரர்கள் திட்டத்தை மேற்கொள்ளமுடியும். இதை விஸ்தரிக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்கிறோம்.

Electrification of villages

*** 384 *Q*.—SRI S. M. ANNAMALAI :** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் திட்டமிட்டபடி கிராமங்களுக்கு மின்சார இணைப்புகள் தரப்படுகின்றனவா?

(ஆ) இல்லையாயின், அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Does not arise.

[23rd August 1960

SRI S. M. ANNAMALAI: மிகவும் பின்தங்கிய பிரதேசமாகிய ஜவ்வாது மலை போன்ற இடங்களுக்கு 'அன்ரெம்யூனரேடிவ் ஸ்கீம்' என்று சொல்லி மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. சமுதாய நலத் திட்டம் ஆரம்பித்து ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகியும் அப்படிப்பட்ட இடங்களுக்கு மின்சார இணைப்பு தரப்படாமல் 'அன்ரெம்யூனரேடிவ் ஸ்கீம்' என்று சொல்லி விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு சர்க்கார் மான்யம் தந்தாவது மின்சார இணைப்பு கொடுத்து உதவ முன்வருவார்களா?

THE HON. SRI V. RAMAIAH: இன்று நடைமுறையில் இருக்கக்கூடிய விதிகளின்படி எங்கெங்கே ஸ்கீம் ரெம்யூனரேடிவாக இருக்கிறதோ அங்கெல்லாம் இதுவரைக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் ஏற்படக்கூடிய பல சிக்கல்களை ஆராய்ந்து பார்த்து அவைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் சமீப காலத்தில் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மிகவும் பிற்போக்கான பகுதிகளில் மின்சார இணைப்பு கொடுப்பதுபற்றி சமீப காலத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு ஆங்காங்கே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

Utilization of man-power

* 385 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பகுதிகளில் விருதாவாக இருக்கும் ஆள் பலத்தைப் பயன்படுத்த திட்டக் கமிஷன் தெரிவித்துள்ள யோசனைகள் சம்பந்தமாக திட்டம் வகுப்பதற்காக சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி தன் அறிக்கையை சர்க்காருக்கு சமர்ப்பித்தாகி விட்டதா?

(ஆ) அப்படியாயின், அதன் நகல் ஒன்று சட்ட சபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No.

(*b*) The Report of the Committee has not yet been finalised.

SRI P. G. MANICKAM: கிராமப் பகுதிகளில் முக்கியமாக விவசாயத் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வருஷத்தில் 4 மாதங்கள்தான் வேலை கிடைக்கிறது, 8 மாதங்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேலை இல்லாமல் சும்மா இருக்கும்பொழுது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதெல்லாம்தான் பரிசீலனையில் இருக்கிறது.